செ.வெ.எண்: நாள்:04.04.2019

**நாமக்கல் மாவட்டம்**

**பாராளுமன்ற தேர்தல் -2019 யை யொட்டி நாமக்கல் பாராளுமன்ற தொகுதிக்குட்பட்ட 353 இராணுவ வீரர்களுக்கு மின்னணு அஞ்சல் வாக்கு அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.**

-------

நாமக்கல் பாராளுமன்ற தொகுதியை சேர்ந்த 353 இராணுவ வீரர்களுக்கு இணையதளம் மூலம் தங்களுக்கான அஞ்சல் வாக்கினை பதிவிறக்கம் செய்து அஞ்சல் வாக்களிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாமக்கல் பாராளுமன்ற தொகுதியைச் சேர்ந்த தரைப்படை, விமானப்படை, கடற்படையை சேர்ந்த இராணுவ வீரர்களுக்கு அஞ்சல் வாக்கு அளிப்பதற்காக எலக்ட்ரானிக்கலி டிரான்ஸ்மிட்டட் போஸ்டல் பேலட் சிஸ்டம் (Electronically Transmitted Postal Ballot System – ETPBS) என்ற மென்பொருள் மூலம் நாமக்கல் பாராளுமன்ற தொகுதிக்கான வேட்பாளர் பட்டியல் கொண்ட மின்னணு ஓட்டு சீட்டு இணையதளம் மூலமாக இராணுவ முகாம்களில் உள்ள பதிவேடு அலுவலகத்திற்கு, ரகசிய குறியீட்டு எண்ணுடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இராணுவத்தில் பணிபுரியும் நாமக்கல் பாராளுமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்காளர்கள் தங்களது ரகசிய ஓடிபி எண்ணை பயன்படுத்தி, தங்களுக்கான வாக்குச்சீட்டை பதிவிறக்கம் செய்து, தாங்கள் விரும்பும் வேட்பாளருக்கு வாக்கினை செலுத்தி, வாக்குச்சீட்டினை அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கவுள்ளனர்.

அஞ்சல் மூலம் வரும் வாக்கினை, கியூ ஆர் கோடு கருவி மூலம் ஸ்கேன் செய்து, அவை தகுதியான வாக்கா என்பது உறுதி செய்யப்பட்டு கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும். இவ்வகையில் நாமக்கல் பாராளுமன்ற தொகுதியை (நாமக்கல், இராசிபுரம், சேந்தமங்கலம், பரமத்திவேலூர், திருச்செங்கோடு, சங்ககிரி ஆகிய 6 சட்டமன்ற தொகுதிகள்) சேர்ந்த 353 இராணுவ வீரர்களுக்காக மின்னணு வாக்குச்சீட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

**ஓம்/-மு.ஆசியா மரியம் இ.ஆ.ப,**
**தேர்தல் நடத்தும் அலுவலர் /**
**மாவட்ட ஆட்சித்தலைவர்,**
**நாமக்கல் மாவட்டம்.**